பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.309/2024

வா.சா.–1. முத்துலெட்சுமி – , க/பெ.துரைச்சாமி

நாள். 12.03.2026

வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் வீட்டுக் குடித்தனம் செய்கிறேன் என் கணவர் இபியில் வேலை செய்து ஓய்வு பெற்று வீட்டில் உள்ளார். நான் பிரதிவாதிக்கு வேலை வாங்குவதற்கும், சில்லறை கடன்களை அடைப்பதற்காகவும் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். பிரதிவாதியை எனக்கு 20 வருடங்களாக தெரியும். அவர் எனது சொந்தம்தான். பிரதிவாதி 2013ல் இருந்து தலையாரியாக உள்ளார். 2013ல் பணிக்கு சேர்ந்த போது அவர் என்னிடம் பணம் வாங்கவில்லை. 2022ல் தான் வாங்கினார். 2013ல் பிரதிவாதிக்கு என்ன சம்பளம் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி சொந்தக்காரரர் என்பதால் கொடுத்தேன். நான் கொடுத்ததாக சொல்லும் பணம் என் கணவர் ஓய்வு பெற்ற வகையில் வந்த பணம் ஆகும். என் பிரமாண வாக்குமூலத்திலும், தாவாவிலும் ஓய்வு பெற்ற பணம் என சொல்லவில்லை என்றால் சரிதான். 2022க்கு முன்பாக நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் பிரதிவாதியின் கணவருக்கு கொடுத்துள்ளேன். பிரதிவாதியின் கணவர் பெயர் மணி அவர் எனது அத்தை மகன் ஆவார். மணியின் அக்காவை என் அண்ணன் பாலகுருவுக்கு கட்டியுள்ளோம். என் அண்ணன் 7 வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். பாலகுரு இறந்த சமயத்தில் என் அண்ணன் குடும்பத்தாருடன் பிரச்சனை இருந்தது, அதனால் என் அண்ணன் பாலகுருவிடம் பேச்சு வார்த்தை இல்லை. என் அண்ணன் இறப்பிற்கு முன்பே அவர் குடும்பமும், மணி குடும்பத்தாரும பேச்சு வார்த்தையில்தான் இருந்தாகள் என்றால் சரிதான். என் அண்ணன் பாலகுரு இறந்த பின்பு பாப்பாத்தியை மணிதான் உதவி செய்து குடும்பத்தை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். என் அண்ணன் பாலகுரு இறப்பதற்கு முன்பிருந்தே என் அண்ணன் குடும்பத்தாருக்கும் மணி குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனக்கும் அவர்களுக்கும் பேச்சு வார்த்தை இல்லாததால் ரூ.14 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அணணன் பாலகுரு இறந்ததற்கு போனேன் என்றால்

போனேன். பிரச்சனை வந்தது, திரும்ப வந்து விட்டேன். தற்போது வரை அவர்களிடம் பேச்சு வார்த்தை இல்லை. பிரதிவாதி 2012ல் பணிக்கு சேர்ந்து விட்டார் என்றாலும் அப்போதைக்கு அவரின் சம்பளம் ரூ.7500 என்றாலும் நான் சொல்லும் பெரிய தொகையை அவர் பெறவில்லை என்றாலும் நான் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் மீது கன்னிவாடி காவல்நிலையத்தில் ஒரு புகார் அளித்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகார் 2023 வாக்கில் முன்னர் பிரதிவாதியின் கணவர் பணம் வாங்கியது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேன். எந்த மாதம், தேதி என்று ஞாபகம் இல்லை. 2023என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. தாவா புரோநோட்டை என் அத்தை பையன் மகேஸ்வரன் அந்த சமயத்தில் என் வீட்டில் இருந்ததால் எழுதி ஸ்டாம்ப் ஒட்டி பிரதிவாதி கையெழுத்து போட்டார். தாவா புரோநோட்டு பிரதிவாதி கைப்பட எழுதவில்லை. தாவா புரோநோட்டில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று ஞாபகம் இல்லை. சாட்சி கையொப்பம் போட்டது பிச்சையம்மாள், தேதி ஞாபகம் இல்லை. தாவா புரோநோட்டை நான் உற்பத்தி செய்து பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஏற்கனவே வாங்கிய 2014ம் வருடமே ரூ.2 லட்ச ரூபாயை திருப்பி கொடுத்து விட்டார்கள் என்றாலும் அதற்காக கொடுக்கப்பட்ட புரோநோட்டை நிரப்பி தற்போது தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் வெவ்வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே நேரத்தில் எழுதப்பட்டதுதான். மகேஸ்வரன்தான் எழுதினார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. வெவ்வேறு தேதிகளில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே என்ககும் பிரதிவாதி குடும்பத்துக்கும் பிரச்சனை இருந்து வந்ததால 2022ல் நான் ரூ14.லட்சம் கொடுத்து பொய் என்றாலும் நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதி ரூ–14 லட்சம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.12 20:58:15 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.